DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.347/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | ராஜம்மாள் (Lw -2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1** மற்றும் **2** எதிரிகள் ஆஜர்**)**

**(BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 02.07.2026**

நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எனது குடும்பத்திற்கும் எனது கொழுந்தனார் பாலுவின் குடும்பத்திற்கும் தடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அதனால் எங்களுக்கும் பாலுவின் குடும்பத்திற்கும் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாகத்தான் பிரச்சனை இருந்து வருகிறது. சம்பவத்தன்று எனது கணவர் சம்பவ இடத்தில் முனைக்கல்லை நட்டதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே பஞ்சாயத்தார் மேற்படி முனைக்கல்லை நட்டுவிட்டார்கள் அதனை ஆஜர் எதிரிகள் பிடுங்கி போட்டுவிட்டார்கள். பிடுங்கி போட்ட கல்லைதான் எனது கணவர் நட்டார்.

சம்பவத்திற்கு எத்தனை நாட்கள் முன்னர் எதிரிகள் முனைக்கல்லை பிடுங்கி வீசினார்கள் என்றால் சுமார் 10 நாட்களுக்கு முன்னர் பிடுங்கினார்கள். மேற்படி கல்லை பிடுங்கியதற்கு பின்னர் நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால்

இல்லை. மேற்படி முனைக்கல்லுக்கு தெற்கிலும், கிழக்கிலும் எதிரிகள் குடும்பத்திற்கு நிலம் இல்லை என்றால் சரிதான். மேற்படி தடத்தின் மூலமாகத்தான் நாங்களும் எதிரிகளும் அவர் அவர் காட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். எதிரிகள் எனது கணவரிடம் பிரச்சனை செய்ததற்கு பின்னிட்டுதான் நான் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தன்று எனது கணவர் எதிரிகளை கல்லால் அடித்து துரத்தினார் என்றாலும் எதிரிகள் எனது கணவரை அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது கணவருக்கு அடிபட்டதற்கு பின்பு எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டி நான் சென்று ஜெயபால் மற்றும் அஜித் ஆகியோரை அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. அவர்கள் சம்பவ இடத்தில் தான் இருந்தார்கள். எதிரிகள் மேற்படி முனைக்கல்லை பிடுங்கி எரிந்தது பொய் என்றாலும் அவ்வாறு பிடுங்கி இருந்திருந்தால் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி முனைக்கல்லில் தெற்கிலும், கிழக்கிலும் எதிரிகளுக்கு நிலம் இல்லாத பட்சத்தில் மேற்படி முனைக்கல்லை எதிரிகள் பிடுங்கி எறியவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி தடத்தின் மேற்குபுறமாக உள்ள அத்துக்கல் வரிசையில் கடைசி கல்லின் அருகில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

தார் ரோட்டில் இருந்து தெற்குபுறத்தில் இறங்கி வரும்போது முதல் வீடு என்னுடையது என்றால் சரிதான். எங்களது வீட்டை தாண்டிதான் எதிரிகளின் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். எனது கணவர்தான் எதிரிகளை அடித்தபோது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**